**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2021 மே 25 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2021இன் 08ஆம் இலக்கம்**

**உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, உண்மைப் பொருளாதாரத்தில் மூலதன உருவாக்கத்தினைத் தூண்டும் தேவையினையும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தேவைப்பாடுகளைத் துணைநிரப்பு செய்வதனையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை இத்தால் விடுக்கிறது.

இதற்கமைய, இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் விடயம் அறிவிக்கப்படுகிறது:

1. உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில், ஓராண்டு காலப்பகுதிக்கு, தற்போதுள்ள குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறை இரத்துச் செய்யப்படுகின்ற அதேவேளையில், பொருத்தமான இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கை முறைகளினூடாக, அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகளில் எந்தவொரு மிகையான உயர்வினையும் ஏற்படுத்தாது என்பதனை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துவதற்கு உட்பட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் 2018இன் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரை 9.1இன் விபரங்களை அத்தகைய கடன்பாடுகளுக்கு முன்னர் அறிவித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தற்போதைய மொத்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறையினை 10 சதவீதம் வரைக்கும் பேணலாம்.
2. உரிமம்பெற்ற வங்கிகள் எடுத்துக்காட்டப்பட்ட பணிப்புரைகளின் மற்றைய அனைத்து பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
3. உரிமம்பெற்ற வங்கிகள் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறான மொத்த வெளிநாட்டு நாணய கடன்பாடுகளின் நிலைமையினை இணைக்கப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறு 2021 யூன் 30ஆம் நாள் தொடக்கம் 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

2021இன் 8ஆம் இலக்கப் பணிப்புரை

வங்கியின் பெயர்:

வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மாதாந்த கூற்று:

காலம்:

தொகை 000' இல்

| இணைத்தரப்பினரின் பெயர் (கடன் வழங்குபவர் | நாடு | வியாபார அலகு (உ.வ.பிரிவு/ வெ.வ.பிரிவு) | கொடுக்கல் வாங்கலின் தன்மை (உற்பத்தி/ சாதனங்கள்) | நாணய வகை | வட்டி வீதம் (%) | ஏனைய கட்டணங்கள் | வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதியில் கடன்பட்ட தொகை | வெளிநின்ற தொகை | | கடன்பாட்டின் நோக்கம் | அடுக்கு II மூலதனத்தினை உள்ளடக்குகின்றதா ஆம்/ இல்லை | கடன்பாட்டுத் திகதி | முதிர்ச்சித் திகதி | மீள்கொடுப்பனவு | | இடர்நேர்வுத் தணிப்பு, பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள் | | | | | இணைத்தரப்பினரின் தரமிடல் (கடன்வழங்குநர்)/ சாதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வெளிநாட்டு நாணயத்தில் பெறுமதி | ரூபாவில் சமனான தொகை | | | | | மூலதனம் | வட்டி | இணைத்தரப்பு | தொகை வெளிநாட்டு நாணயப் பெறுமதி | காலம் | செலாவணி வீதம் முதல் பிரிவு (விற்கப்பட்ட வீதம்) | செலாவணி வீதம் இரண்டாம் பிரிவு (வாங்கப்பட்ட வீதம்) | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |